

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2023

வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

© 2023 வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்
செயலக காரியாலயம் (3ஆம் மாடி)
த.பெ.இ. 277
கொழும்பு
இலங்கை

Info@erd.gov.lk
http://www.erd.gov.lk

உள்ளடக்கம்

பக்க இலக்கம்	
1	அத்தியாயம் 01 நிறுவன விபரம்
7	அத்தியாயம் 02 முன்னேற்ற மற்றும் எதிர்கால நோக்கு
17	அத்தியாயம் 03 குறித்த வருடத்துக்கான பொதுவான நிதிச் செயலாற்றுகை
25	அத்தியாயம் 04 செயலாற்றுகை சுட்டிகள்
26	அத்தியாயம் 05 நிலையான அபிவிருத்தி இலக்குகளின் செயலாற்றுகை
28	அத்தியாயம் 06 மனித வள விபரம்
33	அத்தியாயம் 07 இணக்கப்பாட்டு அறிக்கை

அத்தியாயம் 01

நிறுவன விபரம்

1.1. அறிமுகம்

வெளிநாட்டு வளங்கள் திணைக்களமானது வெளிநாட்டு நிதியுதவிகளை திரட்டுவதற்கான அதிஉயரந்த அரசாங்க திணைக்களம் என்பதுடன் இது தொடர்பாக ஏனைய திறைசேரி திணைக்களங்களுடனும் வரிசை அமைச்சுக்களுடனும் ஒருங்கிணைப்பினைப் பேணுவது இதன் பொறுப்பாகும்.

வெளிநாட்டு வளங்கள் திணைக்களமானது பணிப்பாளர் நாயகம் மற்றும் நான்கு மேலதிகப் பணிப்பாளர் நாயகங்களின் மூலம் நிர்வகிக்கப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டில் உரிய பணிப்பாளர்களினால் பின்வரும் பிரிவுகளும் தலைமை வகிக்கப்படுகின்றன.

- ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு
- கிழக்கு ஆசியப் பிரிவு
- உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதிப் பிரிவு
- சீனா மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிப் பிரிவு
- மத்திய கிழக்கு, தென்னாசிய நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் முகவராண்மை பிரிவு
- முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள் பிரிவு
- தொழில்நுட்ப உதவி பிரிவு
- மூலதனச் சந்தை மற்றும் முதலீட்டுப் பிரிவு
- படுகடன் முகாமைத்துவப் பிரிவு
- துறை ஒருங்கிணைப்பு பிரிவு
- நிர்வாகப் பிரிவு
- கணக்குகள் பிரிவு
- தகவல் தொழில்நுட்ப பிரிவு

1.2. நிறுவனத்தின் நோக்கு செயற்பணி குறிக்கோள்

நோக்கு

இலங்கையின் நிலைத்து நிற்கும் பொருளாதார அபிவிருத்திக்காக வளங்களை ஒன்று திரட்டுதல்.

செயற்பணி

இலங்கையில் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு தேவையான உலகளாவிய அறிவு, அனுபவம், தேர்ச்சி மற்றும் பொருத்தமான நிபந்தனைகளின் கீழ் வெளிநாட்டு வளங்களைப் பெற்றுக்கொள்வதற்கான மூலங்களை வழங்குதல் அதேபோன்று பணி மூலதனம் மற்றும் நாட்டின் அபிவிருத்தித் தேவைப்பாடுகளுக்காக உள்நாட்டு நிதியங்களை திட்டமிடுதல்.

குறிக்கோள்கள்

- அபிவிருத்தி தேவைகளுக்காக வெளிநாட்டு வளங்களை பொருத்தமான நிபந்தனையின் கீழ் ஒன்று திரட்டுதல்.
- திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வளங்களை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்காக நிறைவேற்று மற்றும் செயற்பாட்டு நிறுவனங்களுக்கு வசதிகளை வழங்குதல்.
- வெளிநாட்டு திறன்விருத்தி பயிற்சி வாய்ப்புகளை வினைத்திறன்மிக்க முறையில் ஒன்று திரட்டுவதன் மூலம் அரசாங்க துறையின் மனிதவள அபிவிருத்திக்காக பங்களிப்புச் செய்தல்.
- திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பாரிய பொறுப்புக்களை வினைத்திறனுடனும் அதேபோன்று செயல்திறனுடன் நிறைவேற்றும் பொருட்டு திணைக்களத்தின் ஆற்றல்களை வலுவூட்டுதல்.

1.3. பிரதான பணிகள்

1. அபிவிருத்தி பங்காளர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல்.

2. ஒவ்வொரு அபிவிருத்திப் பங்காளிகளும் வருடாந்தம் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கவுள்ள வெளிநாட்டு நிதிகள் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களில் செயற்பாடுகளை வரிசை அமைச்சுடன்/ நிறுவனத்துடன் கூட்டிணைத்தல்.

3. வரிசை அமைச்சுடன்/ தேசிய திட்டமிடல் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து வெளிநாட்டு நிதியிடலுக்காக கருத்திட்ட ஒழுங்குகளை தயாரித்தல்.

4. வெளிநாட்டு உதவிகளை வழங்குகின்ற வெளிநாட்டு தூது குழுக்களின் செயற்பாட்டு நிலைமையை ஆய்வு கட்டத்திலிருந்து மதிப்பீட்டு கட்டம் வரை கூட்டிணைத்தல்.

5. வெளிநாட்டு உதவிகள் பற்றிய உடன்பாட்டு கலந்துரையாடலை நடாத்துதல் மற்றும் கடன் / மானிய உடன்படிக்கைகள் கைச்சாத்திடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அந்த உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக பின்வரும் பணிகளில் ஈடுபடுதல்.
   - அபிவிருத்தி பங்காளர்கள் மற்றும் கடன் வழங்கும் முகவர் நிறுவனங்களுடன் உடன்பாட்டு கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல்.
   - உடன்படிக்கைகளில் கைச்சாத்து சம்பந்தமாக அரசாங்கத்தின் அனுமதியையும் அதிகார பலத்தையும் பெற்றுக்கொள்ளுதல்
   - நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களுடன் உப கடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுதல்.
   - கடன் உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு தேவையான முன் நிபந்தனைகளை பூர்த்தி செய்தல்.

6. வெளிநாட்டு கடன்கள்/ மானியங்கள் மூலம் நிதியளிக்கப்படுகின்ற கருத்திட்டங்களின் செயல்திறனைக் கண்காணிப்பதற்கு பின்வரும் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்:
   - அபிவிருத்தி பங்குதார்ரகளின் மீளாய்வுப் பணிகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட பின்தொடர்தல் நடவடிக்கைகளை எடுத்தல்.
   - வெளிநாட்டு நிதியிடலின் மூலம் செயல்படுத்தப்படும் கருத்திட்டங்களைச் மேற்பார்வையிடுவதற்காக வரிசை அமைச்சுக்களினால் அமைக்கப்பட்ட வழிநடத்தல் குழுக்களில்

	பங்குபற்றுதல் மற்றும் அபிவிருத்திப் பங்குதாரர்களுடன் இணைந்து கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமான மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
7	தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி பங்காளிகளிடமிருந்து கிடைக்கின்ற வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகளை முகாமை செய்தல்.
8	பின்வரும் நடவடிக்கைகளின் மூலம் வெளிநாட்டு அரசாங்க கடனை நிர்வகிப்பதில் மதிப்பீடு செய்தல்.


- பொதுநலவாய கடன்களைக் குறித்திக் கொள்ளுதல் மற்றும் கடன் முகாமைத்துவ அமைப்பின் (CS-DRMS) மூலம் அரசாங்க வெளிநாட்டு கடன் பிரிவு பற்றிய தரவுத்தளத்தை பராமரித்தல்.

    - கடனைத் திருப்பிச் செலுத்தும் நிபந்தனைகள் மற்றும் உடன்படிக்கைகள் தொடர்பான தொடர்புடைய தகவல்களைச் சேர்த்தல்.
    - கடன்/ மானிய உடன்பாடுகள், வருமானம், வட்டி மற்றும் தவணைக் கொடுப்பனவுகள், நாணயமாற்று விகிதங்கள், தளம்பல் வட்டி விகிதங்கள் மற்றும் தொடர்புடைய பேரண்டப் பொருளாதாரத் தரவுகளைச் சேர்த்தல்.

- சரியான நேரத்தில் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு கடன் சேவை பற்றிய ஆலோசனைகளை வழங்குதல்.
-
- அரசிறை முகாமைத்துவம் மற்றும் ஏனைய தீர்மானங்களை எடுப்பதில் உதவும் பொருட்டு வெளிநாட்டு கடன் சேவை எதிர்வுகூறல் தரவுகளை வழங்குதல்.
- கணக்கீடு மற்றும் வெளியீடுகளுக்காக தொடர்புடைய நிறுவனங்களுக்கு கடன் தரவுகளை விநியோகித்தல்.
- உலக வங்கிக்கு மற்றும் சர்வதேச நாணய நிதிக்கு காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் வெளிநாட்டுக் கடன் தரவுகளைப் அறிக்கையிடுதல்.
- பொது மக்களின் பயன்பாட்டிற்காகவும் ஏனைய பங்குதாரர்களுக்காகவும் திணைக்களத்தின் இணையதளத்தில் வெளிநாட்டுக் கடன்கள் பற்றிய தகவல்களை வெளிப்படுத்துதல்.
- தரவுகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக, அபிவிருத்திப் பங்குதாரர்களுடன் அவ்வப்போது கடன் தரவுகளை மீளிணக்கம் செய்தல்.
- தேவைக்கேற்ப கடன் தரவுகளை பகுப்பாய்வு செய்தல்.

9	பணி மூலதனம் மற்றும் நாட்டின் அபிவிருத்தித் தேவைகளுக்கு உள்நாட்டு நிதியை வழங்குதல்.
10	வெளிநாட்டு வணிக கடன் வாங்கும் பரிவர்த்தனைகளை கட்டமைத்தல் மற்றும் செயல்படுத்துதல்
11	நிலையான கடன் நிர்வாகத்திற்கான நிதியளிப்பு மற்றும் கட்டமைப்பின் மூலம் மூலதன திட்டங்களுக்கு நிதியளித்தல் - நிலைபேறான நிதி ஆதாரங்களை கண்டறிதல் மற்றும் தேவையின் அடிப்படையில் கருத;திட்டங்களை கட்டமைத்தல் - பசுமை நிதியுதவிக்கான கருத்திட்டங்களின் தேர்வு மற்றும் கட்டமைப்பை இலகுபடுத்துதல். - பிந்தைய வெளியீட்டு செயல்முறையை நிர்வகித்தல் மற்றும் வழிகாட்டுதல், அறிக்கை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் - நிலைபேறான மற்றும் காலநிலை நிதி திரட்டலை மேம்படுத்த தேசிய, பிராந்திய மற்றும் உலகளாவிய பங்குதாரர்களுடன் மூலோபாய கூட்டாண்மைகளை உருவாக்குதல். - உரிய பங்குதாரர்களுடனான நெருக்கமான ஒத்துழைப்புடன் பசுமைத் கருத்திட்ட வழியினை மேம்படுத்துவதற்கு உதவுதல் மற்றும் வசதி செய்தல். இலங்கை அரசாங்கத்தின் பசுமை நிதியளிப்பு நிகழ்ச்சி நிரலை வழங்குவதற்கு தற்போதைய நிதி இடைவெளியின் மதிப்பீட்டின் அடிப்படையில் பயனுள்ள பசுமை நிதி திரட்டல் உத்திகளை வடிவமைத்தல், இலங்கை அரசாங்கமானது எவ்வாறு தனியார் நிதியின் தொடர்புடைய வடிவங்களை மிகவும் திறம்பட திரட்டி நாட்டை குறைந்த கார்பன் விருத்தி சார்ந்த, அத்துடன் கார்பன் கடன் வசதிகளைத் பெறுவதற்கான நிலைக்கு மாற்றுவதில் ஒரு ஊக்கியாக பங்கு வகிக்க முடியும் என்பது குறித்து ஆலோசனை வழங்குதல். - பங்குதாரரின் திறன் தேவைகளை மதிப்பீடு செய்தல், உத்திகளை உருவாக்குதல் மற்றும் திறன் மேம்பாட்டை செயல்படுத்துதல்
12	அனைத்து வெளிநாட்டு நிதியிடல் கருத்திட்டங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் வருடாந்த வரவுசெலவு தயாரிப்புச் செயல்முறைக்கு வசதிகளை வழங்குதல்.

1.4. நிறுவனக் கட்டமைப்பு



சீனா மற்றும் ஏஐபீ – சீனா மற்றும் ஆசிய முதலீட்டு வங்கிப் பிரிவு
எம்இ,எஸ்ஏ மற்றும் யுஎன்– மத்திய கிழக்கு,தென் ஆசியா,ஐக்கிய நாடுகள் நிறுவனப்பிரிவு
உலக வங்கி மற்றும் ஐஎம்எப் – உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம்
சீஎம் மற்றும் ஐஎன் – மூலதன சந்தை, முதலீடு மற்றும் நிலையான நிதியியல் பிரிவு
ஏடிபீ – ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு
எஇ – முன்னேற்றமான பொருளாதார பிரிவு
எஸ்சீ – துறை ஒருங்கிணைப்பு
இஏ – கிழக்கு ஆசிய பிரிவு
டிஎம் – கடன் முகாமைத்துவப்பிரிவு
திஏ – தொழல்நுட்ப உதவிப் பிரிவு
ஏடிஜி – மேலதிக பணிப்பாளர்நாயகம்
டிடி – பிரதி பணிப்பாளர்
ஏடி – உதவி பணிப்பாளர்
ஏஒ – நிர்வாக உத்தியோகத்தர்
ஐதிஒ – தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்

அத்தியாயம் 02

முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

2.1 அறிமுகம் மற்றும் எதிர்கால நோக்கு

2022 ஆம் ஆண்டின் இறுதியில், இலங்கைப் பொருளாதாரத்தில் ஆரம்பகால பொருளாதார ஸ்திரத்தன்மையின் அறிகுறிகள் பிரதிபலித்தன, மேலும் 2023 ஆம் ஆண்டில், பொருளாதார ஸ்திரத்தன்மையை நீண்டகாலத்திற்கு பேணுவதற்காக மீட்பு முயற்சிகளை மேலும் வலுப்படுத்த சில சட்ட மற்றும் நிதி சீர்திருத்தங்கள் ஆரம்பிக்கப்பட்டன. முக்கிய கொள்கை நடவடிக்கைகளில் ஒன்றாக, 2023 மார்ச் 20 அன்று, அரசாங்கமானது சுமார் 3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கொண்ட சர்வதேச நாணய நிதியத்தின் (IMF EFF) நான்காண்டு விரிவாக்கப்பட்ட நிதி வசதித் நிகழ்ச்சித்திட்டம் 2023- 26 இல் நுழைந்தது. கடன் கொள்கை ஸ்தம்பிதநிலை மற்றும் ஐஎம்எப்- இஎப்எப் நிகழ்ச்சிதிட்டத்தை நிறைவேற்றுவதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு காரணமாக, கிட்டத்தட்ட அனைத்து இருதரப்பு கடனாளர்களும் தங்கள் நிதியை வழங்குவதை நிறுத்தியதுடன் 2023 ஆம் ஆண்டில் பெரும்பாலான கடன்கள் பலதரப்பு கடன் வழங்குநர்கள் மற்றும் ஐஎம்எப் மூலம் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி, ஐஎம்எப்- இஎப்எப் வசதியின் கீழ் வழங்கப்பட்ட மொத்த தொகை ஐஅடொ 508 மில்லியன் ஆகும். ஐஎம்எப்- இஎப்எப் இன் கீழ் ஆதரவை வலுப்படுத்த, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி 2023 ஆம் ஆண்டில் மொத்தம் 1,045.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியதன் மூலம் தங்கள் உதவியை நீடித்தன. பொருளாதார ஸ்திரத்தன்மை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கி 350.0 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது. மற்றும் நிதித் துறை ஸ்திரத்தன்மை மற்றும் சீர்திருத்தத் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஐஅடொ 200.0 மில்லியன் - துணைத் நிகழ்ச்சித்திட்டம் 1 இற்கு வழங்கியுள்ளது.. உலக வங்கி 2023 இல் மீட்சி, நிலைத்தன்மை மற்றும் பொருளாதாரத் திருப்பம மேம்பாட்டுக் கொள்கை நிதியளிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஐஅடொ 495.6 மில்லியனினை வழங்கியுள்ளது.

இருதரப்பு நீரோட்டத்தில், 2023 இல் இந்தியா, ஜப்பான், நெதர்லாந்து, அரேபிய பொருளாதார மேம்பாட்டுக்கான சவுதி நிதி, ஜெர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகியவற்றிலிருந்து ஐஅடொ 222.0 மில்லியன் மதிப்புள்ள வெளிநாட்டு நிதியுதவி பெறப்பட்டது. மேலும், 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்கான வெளிநாட்டு நாணயத் தேவையை எளிதாக்கும் வகையில் இந்திய அரசாங்கத்திடம் இருந்து பெறப்பட்ட அவசரக் கடன் சார் வசதிகள் கணிசமாக உதவியது. இதன்படி 2023 ஆம் ஆண்டில் 2,568.7 மில்லியன் அமெரிக்க டொலர்களான கணிசமான அளவு வெளிநாட்டு நிதியை அரசாங்கத்திற்கு பெற முடிந்தது.

2.2 முன்னேற்றம்

2.2.1. வெளிநாட்டு நிதி உறுதிமொழிகள்

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் வெளிநாட்டு அபிவிருத்தி பங்காளிகள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களுடன் 16 உடன்படிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் அரசாங்கம் 2,121 மில்லியன் அமெரிக்க டொலர்களை வெளிநாட்டு நிதியுதவியாகப் பெற்றது. இது ஐஎம்எப்- இஎப்எப் ஏற்பாட்டின கீழ் ஐஅடொ 728.1 மில்லியன் இனையும், பொருளாதார உறுதிப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம், மற்றும் நிதித்துறை உறுதிப்பாடு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சீர்திருத்தத் நிகழ்ச்சித்திட்டத்தின் - உபநிகழ்ச்சித்திட்டம் 1 இற்கு 550.0 ஐஅடொலர் இனையும் மற்றும் ', ஆசிய அபிவிருத்தி வங்கியினால் விரிவுபடுத்தப்பட்ட இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டுத் நிகழ்ச்சித்திட்டம் - தவணை 4 தொடர்பில் ஐஅடொ 60.0 மில்லியனினையும்., ரீசெட் அபிவிருத்தி கடன் நிதிக்கு ஐஅடொ 495.6 மில்லியன் மற்றும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தினால் விரிவுபடுத்தப்பட்ட சமூக பாதுகாப்பு கருத்திட்டத்திற்கு ஐஅடொ 196.2 மில்லியன் தொகையினையும் உள்ளடக்கியுள்ளது... 2023 ஆம் ஆண்டின் போது கடன் ஒப்பந்தங்கள் தவிர, ஜப்பான் அரசு, அமெரிக்க அரசு (அமெரிக்கா), ஐரோப்பிய ஒன்றியம், கொரியா அரசு மற்றும் சர்வதேச அபிவிருத்தி சங்கம் ஆகியவற்றுடன் மேற்கொள்ள்பபட்ட பத்து மானிய ஒப்பந்தங்கள் மூலம் அதிகாரப்பூர்வ மேம்பாட்டு உதவி வழியில் மொத்தம் ஐஅடொ 90.6 மில்லியன் பெறப்பட்டுள்ளது.

இந்தக் காலக்கட்டத்தில், முறையே ஐடிஏ (ஐஅடொ 696.0 மில்லியன்), ஏடிபி (ஐஅடொ 610.0 மில்லியன்), ஜப்பான் (ஐஅடொ 44.2 மில்லியன்),ஐக்கிய அமெரிக்கா (ஐஅடொ 19.3 மில்லியன்), ஐரோப்பிய ஒன்றியம் (15.8) மில்லியன்) மற்றும் கொரியா (ஐஅடொ 7.1 மில்லியன்). ஆகியவற்றினால் வழங்கப்பட்ட உறுதிப்பாடுகளைத் தொடர்ந்து ஐஎம்எப் இனது ஐஅடொ 728.1 மில்லியன் தொகை கொண்ட உறுதிப்பாடு தலைமை தொகையாகக் காணப்பட்டது.

வரவுசெலவுத்திட்ட ஆதரவுத் துறைக்காக உயர்ந்தளவில் உறுதிப்பாடானது மேற்கொள்ளப்பட்டது. இது 1,774.0 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அல்லது மொத்தக் உறுதிப்படுகளில் 84 சதவிகிதமாகும்.

மொத்த உறுதிப்பாடுகள்	கடன்கள்	மானியங்கள்
ஐ.அ.டொ 2,120.5 மில்லியன்	ஐ.அ.டொ 2,029.9 மில்லியன்	ஐ.அ.டொ 90.6 மில்லியன்


2023 இல் அபிவிருத்தி பங்காளிகளால் மேற்கொள்ளப்பட்ட உறுதிப்பாடுகள்

அபிவிருத்தி பங்காளர்	தொகை (ஐஅடொ மில்லியன்)		
	கடன்	மானியம்	மொத்தம்
இருதரப்பு	**-**	**70.6**	**70.6**
ஜப்பான்	-	44.2	44.2
ஐக்கிய அமெரிக்கா	-	19.3	19.3
கொரியா	-	7.1	7.1
பலதரப்பு	**2,029.9**	**20.0**	**2,049.9**
சர்வதேச நாணய நிதியம் (ஐஎம்எப்)	728.1	-	728.1
சர்வதேச அபிவிருத்தி சங்கம் (ஐடிஏ)	691.8	4.2	696.0
ஆசிய அபிவிருத்தி வங்கி (ஏடிபி)	610.0	-	610.0
ஐரோப்பிய ஒன்றியம் (இயு)	-	15.8	15.8
மொத்தம்	**2,029.9**	**90.6**	**2,120.5**

மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்
ஒவ்வொரு ஒப்பந்தத் தேதியிலும் நிலவும் தினசரி சராசரி மாற்று விகிதங்களைப் பயன்படுத்தி வேறுபட்ட நாணயங்களில் உள்ள நிதி மதிப்புகள் ஐஅடொ ஆக மாற்றப்பட்டுள்ளன.


எஸ்டிஆர் / ஐஅடொ ஆக மாற்ற, இலங்கை அரசினால் வெளியிடப்பட்ட முந்தைய மாதத்திற்குப் பயன்படுத்தப்பட்ட எஸ்டிஆர் இன் மாத இறுதி மாற்று விகிதம் பயன்படுத்தப்பட்டது.

2023 இல் பாரிய அபிவிருத்தி பங்காளிகளால் மேற்கொள்ளப்பட்ட உறுதிப்பாடுகள்(ஐஅடொ மில்லியன்}



மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

2023 இல் பாரிய பொரளாதார துறையினால் மேற்கொள்ளப்பட்ட உறுதிப்பாடுகள்(ஐஅடொ மில்லியன்}



**மற்றவை - கல்வி மற்றும் பயிற்சி, மீன்பிடி, சுற்றுலா மற்றும் உணவு விடுதி கைத்தொழில்*

விதிமுறைகளுடன் வெளிநாட்டு நிதியுதவி உறுதிமொழிகள் - 2023 ஜனவரி 1 முதல் டிசம்பர் 31, 2023 வரை

ஆபிவிருத்தி பங்குதாரர் / கடன் வழங்கும் நிறுவனம்	சாதன வகை	ஒப்பந்தத்திகதி(தி.ம.ஆ)	கருத்திட்டம்/நிகழ்ச்சித்திட்டம் /சாதனப் பெயர்	ஈடுபடுத்தப்பட்ட தொகை(மில்))				நிதியியல் விதிமுறை				பிற விதிமுறை	
				நாணயம்	சாதனம் நாணயத்தில்	ரூபா	ஐஅடொ	வட்டி			பிற கட்டணங்கள்	கருணை காலம் (ஆண்டு)	கையொப்பமிட்ட தேதியிலிருந்து முதிர்வு / கிடைக்கும் காலம் (ஆண்டுகள்)
								வகை	ஆண்டு வீதம் (மு)	வரம்பு (100 அடிப்படை புள்ளிகள்)			
இருதரப்பு													
ஜப்பான்	மானியம்	22/2/2023	ஜப்பானிய பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டுத் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் எரிபொருள் மானிய உதவி	ஜப்பான் யென்	5,000.0	13,423.0	37.1	ஏற்புடையதல்ல					3
	மானியம்	26/4/2023	தொற்று கழிவு முகாமையினை மேம்படுத்துவதற்கான கருத்திட்டத்திற்கு உதவி வழங்கல்	ஜப்பான் யென்	503.0	1,211.7	3.8	ஏற்புடையதல்ல					3
	மானியம்	9/8/2023	மனிதவள மேம்பாட்டு புலமைபரிசில் கருத்திட்டம்	ஜப்பான் யென்	284.0	636.2	2.0	ஏற்புடையதல்ல					3
	மானியம்	22/11/2023	பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மீன்பிடித் தொழிலுக்கு ஆதரவான உபகரணங்களை வழங்குதல்	ஜப்பான் யென்	200.0	442.9	1.4	ஏற்புடையதல்ல					3
கொரியா	மானியம்	31/5/2023	இலங்கையின் தென் பகுதியில் மிதக்கும் சூரிய ஒளிமின்னழுத்த (ஏ) முன்னோடி திட்டம் (சந்திரிகா வெவ மற்றும் கிரிப்பன் வெவ, தலா 1மெகா வோட்)	வொன்	6,830.0	1,524.4	5.1	ஏற்புடையதல்ல					1
கொரியா	மானியம்	12/5/2023	இலங்கையில் நியகமவில் உள்ள தொழிலாளர் சந்தை தேவை உந்துதல் தொழில்நுட்ப தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையை வலுப்படுத்துதல்	வொன்	2,150.0	516.2	1.6	ஏற்புடையதல்ல					1
	மானியம்	15/2/2023	இலங்கையின் வடகிழக்கு மற்றும் மத்திய பிரதேசங்களில் சமூக அடிப்படையிலான சுற்றுலா அபிவிருத்தி கருத்திட்டம்	வொன்	400.0	117.8	0.3	ஏற்புடையதல்ல					1
யுஎஸ்ஏ	மானியம்	28/7/2023	ஜனநாயக, செழிப்பான மற்றும் உறுதியான இலங்கை நிகழ்ச்சித்திட்டம் (மேம்படுத்தல்)	ஐஅடொ	13.2	4,356.3	13.2	ஏற்புடையதல்ல					4

	மானியம்t	17/8/2023	ஒரு ஜனநாயக, செழிப்பான மற்றும் உறுதியான இலங்கை நிகழ்ச்சித்திட்டம் (மேம்படுத்தல்)	ஐஅடொ	6.0	1,926.6	6.0	ஏற்புடையதல்ல					4
பலதரப்பு													
ஏடிபி	கடன்	29/5/2023	பொருளாதார உறுதிப்படுத்தல நிகழ்ச்சித்திட்டம்	ஐஅடொ	350.0	104,689.1	350.0	மாறக்கூடிய	எஸ்ஒஎப் ஆர்	2	உறுதிக் கட்டணம் 0.75%	4	8
	கடன்	28/11/2023	இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டுத் நிகழ்ச்சித்திட்டம் - பகுதி-4	ஐஅடொ	60.0	19,740.2	60.0	நிலையான	2	கிடைக்கவில்லை	-	5	25
	கடன்	11/12/2023	நிதித் துறை உறுதிப்பாடு மற்றும் சீர்திருத்தத் நிகழ்ச்சித்திட்டம் - துணைத் நிகழ்ச்சித்திட்டம் 1	ஐஅடொ	200.0	65,386.3	200.0	நிலையான	2	கிடைக்கவில்லை	-	5	25
ஐரோப்பா ஒன்றியம்	மானியம்	23/10/2023	உணவுத் துறையில் சுழல் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்	யூரோ	15.0	5,158.2	15.9	ஏற்புடையதல்ல					5
ஐடிஏ	கடன்	28/6/2023	மீட்சி, உறுதிப்பாடு மற்றும் பொருளாதாரத் திருப்பம் (ரீசெட்) மேம்பாட்டுக் கொள்கை நிதியுதவி	*எஸ்டிஆர்	371.2	153,049.4	495.6	வட்டி இன்றி			உறுதிக் கட்டணம் 0.5%	6	12
	கடன்	21 / 9 / 2023	சமூக பாதுகாப்பு கருத்திட்டம்	* எஸ்டிஆர்	148.5	63,724.8	196.2	நிலையான	1.25	கிடைக்கவில்லை	சேவை கட்டணம் 0.5%0.75% உறுதிக் கட்டணம் 0.5%	5	30
ஐடிஏ	மானியம்	6/7/2023	இலங்கை - பொது நிதி முகாமைத்துவத்தை வலுப்படுத்தும் கருத்திட்டம்	ஐஅடொ	4.2	1,289.3	4.2	ஏற்புடையதல்ல					3
ஐஎம்எப்	கடன்	20 / 3 / 2023	ஐஎம்எப் இலிருந்து இலங்கையின் 2023-26 வரை விரிவாக்கப்பட்ட நிதிவசதி ஏற்பாடு	* எஸ்டிஆர்	508.0	244,110.6	728.1	தொகை அடிப்படையில்			உறுதிக் கட்டணம் 0.5% சேவை கட்டணம் 0.5%	5	11
மொத்தம்						**681,303.0**	**2,120.5**						

மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

குறிப்புகள்: எஸ்ஒஎப்ஆர் = பாதுகாப்பான ஒரே இரவில் நிதியுதவி விகிதம்

ஒவ்வொரு ஒப்பந்தத் தேதியிலும் நடைமுறையில் உள்ள தினசரி சராசரி மாற்று விகிதங்களைப் பயன்படுத்தி வேறுபட்ட நாணயங்களில் உள்ள நிதி மதிப்புகள் ஐஅடொ மற்றும் இலங்கைரூபாவாக மாற்றப்பட்டுள்ளன.
ழு எஸடிஆர் ஐ ஐஅடொ ஆக மாற்ற, இலங்கை அரசினால் ஆல் வெளியிடப்பட்ட முந்தைய மாதத்திற்குப் பயன்படுத்தப்பட்ட எஸ்டிஆர் இன் இன் மாத இறுதி மாற்று விகிதம் பயன்படுத்தப்பட்டது.

2.2.2. வெளிநாட்டு நிதி வழங்கல் மற்றும் பயன்பாடு

2023 ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரையிலான காலகட்டத்தில் மொத்த வெளிநாட்டு நிதி வழங்கல் 2,568.7 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதில், 2,510.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனாகவும், 58.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மானியங்களாகவும் வழங்கப்பட்டுள்ளன.

2023 இல் பதிவான பெரும்பாலான வழங்கல்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கையொப்பமிடப்பட்ட கடன் ஒப்பந்தங்களிலிருந்து வந்தவை, இது உலக வங்கி (29 சதவீதம்) மற்றும் ஐஎம்எப் (27 சதவீதம்) ஆகிய வழங்கல்களை பின்தொடர்ந்து வந்த மொத்த வழங்கல்களில் கிட்டத்தட்ட 33 சதவீதமாகும்,

2023 ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரையிலான வெளிநாட்டு கடன்கள் மற்றும் மானியங்கள் வழங்கல்கள்


அபிவிருத்தி பங்காளிகள்	வழங்கல்கள் (*ஐஅடொ மில்லியன்*)		
	கடன்	மானியம்	மொத்தம்
இருதரப்பு	**176.1**	**45.8**	**221.9**
இந்தியா	142.5	-	142.5
ஜப்பான்	-	39.6	39.6
நெதர்லாந்து	24.7	-	24.7
சவுதி நிதியம்	7.6	-	7.6
ஜேர்மனி	-	6.0	6.0
பிரான்ஸ்	1.3	0.2	1.5
பலதரப்பு	**2,334.2**	**12.6**	**2,346.8**
ஆசிய அபிவிருத்தி வங்கி	853.9	3.0	856.9
உலக வங்கி	743.6	9.6	753.2
சர்வதேச நாணய நிதியம்	681.5	-	681.5
ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி	24.2	-	24.2
ஓபெக் நிதியம்	21.3	-	21.3
விவசாய மேம்பாட்டுக்கான சர்வதேச நிதியம்	9.7	-	9.7
மொத்தம்	**2,510.3**	**58.4**	**2,568.7**

மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்
குறிப்பு: வெவ்வேறு நாணயங்களில் செய்யப்பட்ட பணப் பரிமாற்றங்களை ஐஅடொ ஆக மாற்ற, ஒவ்வொரு வழங்கல் தேதியிலும் நிலவும் மாற்று விகிதங்கள் பயன்படுத்தப்பட்டன.
- தற்காலிகமானது


மொத்த வழங்கல்களில் கிட்டத்தட்ட 67 சதவிகிதம் வரவுசெலவுத்திட்ட் ஆதரவுத் துறையில் பயன்படுத்தப்பட்டது, அதைத் தொடர்ந்து வர்த்தகத் துறை 5 சதவிகிதம், சுகாதாரம் மற்றும் சமூக நலத் துறை 5 சதவிகிதம், வீதிகள் மற்றும் பாலங்கள் துறை 4 சதவிகிதம் மற்றும் தரைப் போக்குவரத்துத் துறையில் 4 சதவிகிதம என பயன்படுத்தப்பட்டது.

2023 ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரையிலான வழங்கல்கள்

அபிவிருத்தி பங்காளிகள் / கடன்வழங்கும் முகவரகங்களின் படி (ஐஅடொ மில்லியன்) 2023 க்கான வழங்கல்கள்



பொருளாதார துறையின் படி (ஐஅடொ மில்லியன்) 2023 க்கான வழங்கல்கள்



மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்
**மற்றவை = விவசாய மேம்பாட்டுக்கான சர்வதேச நிதி, சவுதி நிதி, ஜெர்மனி, ஜப்பான், பிரான்ஸ்*
*** மற்ற = வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாடு, கிராமப்புற மேம்பாடு, மனிதாபிமான உதவி, சக்தி மற்றும் ஆற்றல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், பாதுகாப்பு, SME மேம்பாடு, காணி அபிவிருத்தி, சுற்றுச்சூழல், அனர்த்த முகாமைத்துவம், தோட்டம், நீதி மற்றும் நிர்வாகம்*

2.2.3. உறுதியளிக்கப்பட்ட வழங்கப்படாத இருப்பு[1]

2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி நிலவரப்படி, அடுத்த 3-5 ஆண்டுகளில் ஈடுபடுத்தப்படும் கடன்களில் இருந்து கிடைக்கும் வெளிநாட்டு நிதியின் மொத்த வழங்கப்படாத இருப்பு 5.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். மீதியின் பெரும்பகுதி சீனாவுடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட கருத்திட்டங்களிலிருந்தும், அதைத் தொடர்ந்து ஜப்பான், இந்தியா, உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய நாடுகளிலிருந்தும் வழங்கப்படும்.

[1] இடைக்கால கொள்கையால் பாதிக்கப்பட்டது

சீயுபீ இன் கிட்டத்தட்ட 22 சதவீதம் வீதிகள் மற்றும் பாலங்கள் துறையில் பயன்படுத்தப்பட உள்ளது, அதே சமயம் 16 சதவீதம் நீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் மற்றும் 11 சதவீதம் தரைவழி போக்குவரத்து துறையில் பயன்படுத்தப்பட உள்ளது.


டிசம்பர் 31, 2023 இல் உறுதிசெய்யப்பட்ட வழங்கப்படாத இருப்பு

பொருளாதார துறை	சீயுபீ *(ஐஅடொ மில்)*
வீதிகள் மற்றும் பாலங்கள்	1,314
நீர் வழங்கல் மற்றும் சுகாதாரம்	972
தரைவழி போக்குவரத்து	661
வர்த்தகம்	529
கல்வி மற்றும் பயிற்சி	431
சக்தி மற்றும் ஆற்றல்	260
சுகாதாரம் மற்றும் சமூக நலன்	240
நீர்ப்பாசனம் மற்றும் தொடர்புடைய செயல்பாடுகள்	236
மனிதாபிமான உதவி	213
** மற்றவை	1,062
மொத்தம்	5,917

மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்
*கடன் நிறுத்தம் காரணமாக தற்காலிகமானது

மூமூ பிற = வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாடு, பாதுகாப்பு, விவசாயம், ஊடகம், கிராமப்புற மேம்பாடு, சிறு நடுத்தர கைத்தொழில் மேம்பாடு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்,காணி மேம்பாடு, விளையாட்டு உள்கட்டமைப்பு, கால்நடை மேம்பாடு, துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து, தொழிலாளர் மற்றும் தொழில் பயிற்சி, அனர்த்த முகாமைத்துவம் , நீதி மற்றும் நிர்வாகம், தனியார் துறை மேம்பாடு, சுற்றுச்சூழல், பெருந்தோட்டம்

31 டிசம்பர் 2023 இல் கடன் வழங்குபவர்களால் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களுக்கான உறுதிசெய்யப்பட்ட வழங்கப்படாத இருப்பு(ஐஅடொ மில்லியன்)




மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

2.2.4. வெளிநாட்டு கடன் இருப்பு மற்றும் வெளிநாட்டு கடன் சேவை கொடுப்பனவுகள்

டிசம்பர் 2023 இன் முடிவில் மத்திய அரசாங்கத்தின் மொத்த வெளிநாட்டுக் கடன் 37.3[2] பில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்டது. கடனளிப்பவர் வகையின்படி வெளிநாட்டுகடனின் தொகுப்பு கீழே உள்ள படத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடனின் தொகுப்பு - டிசம்பர் 31, 2023 நிலவரப்படி (ஐஅடொ மில்லியன்)



மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

வர்த்தகக்கடனானது மொத்த மத்திய அரசின் வெளிநாட்டுக் கடனில் (39 சதவீதம்) பெரும்பகுதியை பிரதிநிதித்துவப்படுத்துகிறது, இதில் சர்வதேச இறையாண்மை பத்திர வெளியீடுகள் மற்றும் தவணைக் கடன் வசதிகள் மற்றும் பலதரப்பு கடன் (32 சதவீதம்) மற்றும் இருதரப்பு கடன் (29 சதவீதம்) ஆகியவை உள்ளடங்குகிறது..

2023 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி முதல் டிசம்பர் 31 ஆம் தேதி வரையிலான மொத்தக் கடன் சேவைக[3] கொடுப்பனவுகள் ஐஅடொ 1,439.9 மில்லியன் ஆகும், இதில் ஐஅடொ 1,031.3 மில்லியன் முதன்மைத ˙தொகையினை திருப்பிச் செலுத்துதலுக்குப் பதிலாகவும், மீதமுள்ள ஐஅடொ 408.6 மில்லியன் வட்டி செலுத்துதலுக்காகவும் பயன்படுத்தப்பட்டது.

அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இடைக்காலக் கொள்கைக்கு இணங்க, பாதிக்கப்பட்ட இருதரப்பு மற்றும் வர்த்தக கடனாளிகளின் வெளிநாட்டுக் கடனுக்கான சேவை 2022 ஏப்ரல் 12, முதல் இடைக்காலத்திற்கு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதன்படி, முதன்மைத் தொகை 4,451 மில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் வட்டித்தொகை 2080.6* மில்லியன அமெரிக்க டொலர் 2023 இன் இறுதிக்குள் செலுத்தப்படாத கடன் சேவையாக் திரண்டுள்ளது

[2] தற்காலிகமானது, மத்திய அரசின் நிலுவையிலுள்ள வெளிநாட்டுக் கடன்கள் மட்டுமே, கடன் நிறுத்தக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு திரட்டப்பட்ட செலுத்தப்படாத அசல் உட்பட சித்தரிக்கப்படுகின்றன

[3] படுகடன் சேவை = மூலதனக் கொடுப்பனவுகள் + வட்டிக் கொடுப்பனவுகள

* *மறுசீரமைப்பு விவாதங்களின் போது கடனாளிகளுடன் சமரசம் செய்து கொள்ள வேண்டும்*

சான்றுதிப்படுத்துபவர்:

பெயர்: டி.ஏ.பி. அபேசேகர

பதவி: பணிப்பாளர் நாயகம், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

கையொப்பம்: .....

D.A.P. Abeysekera
Director General
Department of External Resources
General Treasury
Colombo - 01, Sri Lanka.

அத்தியாயம் 03

2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகை

3.1. நிதிச் செயலாற்றுகைப் பற்றிய கூற்று

ஏசீஏ- எப்

2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2023		குறிப்பு	ரூபா உண்மையான 2023	 2022	
-	**வருமானப் பெறுகைகள்**		-	-	
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		-	-	
-	**வருமானமற்ற பெறுகைகள்**		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		1,667,441,195	1,773,453,650	ஏசீஏ-3
-	வைப்புகள்		383,084	45,435	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		7,213,293	7,708,550	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		721,919,011	848,780,301	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**2,396,956,583**	**2,629,987,936**	

-	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)**		**2,396,956,583**	**2,629,987,936**	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		**342,557**	**17,357,578**	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		**2,396,614,026**	**2,612,630,358**	
	கழி : செலவினம்				
-	**மீண்டுவரும் செலவினம்**		-	-	
121,150,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	**5**	106,173,058	101,262,342	
79,752,350	ஏனைய பொருட்கள் சேவைகள்	**6**	68,273,992	59,207,613	**ஏசீஏ-2(ii)**
250,377,650	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	**7**	128,703,065	72,326,939	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	**8**	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	**9**	-	-	
451,280,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**		**303,150,115**	**232,796,894**	
	மூலதனம் செலவினம்				
3,500,000	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	**10**	227,978	1,342,655	
17,100,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	**11**	4,757,216	7,257,170	
1,366,156,140	மூலதன மாற்றல்கள்	**12**	1,365,563,607	1,540,022,232	**ஏசீஏ-2(ii)**
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	**13**	-	-	
723,919,011	திறன் விருத்தி	**14**	722,002,511	849,454,724	
-	ஏனைய மூலதனச் செலவினங்கள்	**15**	-	-	
2,110,675,151	**மொத்த மூலதனம் செலவினம் (எ)**		**2,092,551,312**	**2,398,076,781**	
	வைப்புக் கொடுப்பனவுகள்		383,084	45,435	**ஏசீஏ-4**
	முற்பணக் கொடுப்பனவுகள்		6,313,401	5,393,012	**ஏசீஏ-5**
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		**6,696,485**	**5,438,447**	
				-	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		**2,402,397,912**	**2,636,312,122**	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		**(5,783,886)**	**(23,681,764)**	
	பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி		(5,783,886)	(23,681,764)	**ஏசீஏ-7**
-	**டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி**		-	-	**ஏசீஏ-3**
			(5,783,886)	**(23,681,764)**	

3.2. நிதி நிலைமைப் பற்றிய கூற்று

2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

ஏசீஎ -பீ

	குறிப்பு	உண்மை நிலை 2023 ரூபா	2022 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணை	ஏசீஎ-6	173,935,794	182,081,925
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஎ-5/5எ	17,551,939	18,451,833
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஎ-3	-	-
மொத்த சொத்துக்கள்		191,487,733	200,533,758
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		17,551,939	18,451,833
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஎ-5பீ	173,935,794	182,081,925
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஎ-4	-	-
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஎ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		191,487,733	200,533,758

பக்க இலக்கம் 07 முதல் 26 வரை ஏசீஎ 1 முதல் ஏசீஎ 7 வரையான மாதிரிப் படிவங்களின் முலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 27 முதல் 34 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இந்து நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் முலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் இதனால் சான்றுப்படுத்துகிறோம். அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இதனால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக விளைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதனை அமைவாக அந்தத் தொகுதியை விளைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

Signed by D.A.P Abeysekara

Signed by G.G.D. Madurangana

K.M.M. Siriwardana
Secretary to the Ministry of Finance,
Economic Stabilization and National Policies
The Secretariat
Colombo 01.

D.A.P. Abeysekera
Director General
Department of External Resources
General Treasury
Colombo - 01, Sri Lanka.

G.G.D. Madurangana
Assistant Director (Finance) (Actg.)
Department of External Resources
General Treasury
Colombo - 01, Sri Lanka.

3.3. காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசீஏ -சீ

2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2023	2022
	ரூபா	ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	553,031	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	728,952,196	873,403,116
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	1,667,441,195	1,773,453,650
முற்பணங்களை அறவிடல்	7,501,673	7,311,647
வைப்புக்களின் பெறுகை	383,084	45,435
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**2,404,831,179**	**2,654,213,848**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	174,173,231	160,469,956
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	129,003,065	72,326,939
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	2,308,905	90,561
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	342,557	17,357,578
முற்பணக் கொடுப்பனவு	6,069,025	5,846,597
வைப்புக் கொடுப்பனவு	383,084	45,435
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**312,279,867**	**256,137,066**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**2,092,551,312**	**2,398,076,782**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொளதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
	-	-

முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
மூலதன செலவினம்	2,092,551,312	2,398,076,782
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**2,092,551,312**	**2,398,076,782**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(2,092,551,312)**	**(2,398,076,782)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3.4. நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

அறிக்கையிடலின் அடிப்படை

1) **அறிக்கையிடல் காலப்பகுதி**

இந்த நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2023 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

2) **அளவீட்டுக்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

3) **வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

4) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

6) **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2023 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

3.5. வருமான சேகரிப்பு செயலாற்றுகை

வருமான குறியீடு	வருமான குறியீட்டு விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		அசல் மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூபா)	இறுதி வருமான மதிப்பீடு %
_____ஏற்புடையதல்ல_____					

3.6 ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

ஒதுக்கீட்டு வகை	ஒதக்கீடு		உண்மை செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
	ஆரம்பம்	இறுதி		
மீண்டுவரும்	451,280,000	451,280,000	303,150,115	67.1%
மூலதனம்	1,340,200,000	2,110,675,151	2,092,551,312	99.1%

3.7 நி.பி.208 இன் படி, ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் முகவராக இந்தத் திணைக்களம்/மாவட்டச் செயலகம்/மாகாண சபைக்கான செலவினங்களுக்கான ஒதுக்கீடுகளை வழங்குதல்.

தொ. இல	ஒதுக்கீடு பெறப்பட்ட அமைச்சு.ஃ திணைக்களம்	ஒதுக்கீட்டு நோக்கம்	ஒதுக்கீடு		ஊண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் வீதமாக
			ஆரம்ப	இறுதி		
_____ஏற்புடையதல்ல_____						

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

ஆதண குறியீடு	குறியீட்டு விபரம்	2023.12.31 ஆம் திகதிய சுற்றாய்வுச்சபை அறிக்கைப்படி மீதி	2023.12.31 ஆம் திகதிய நிதிநிலமை அறிக்கப்படி மீதி	ஏதிர்காலத்தில் கணக்கிட வேய்டியது	ஆறிக்கையிடல் முன்னேற்றம் %
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	148,588,865.51			
9152	இயந்திரம் மற்றும் உபகரணங்கள்				
9153	காணி	9,446,928.97			
9154	அருவமான சொத்துக்கள்				
9155	உயிரியல் சொத்துக்கள்	15,900,000.00			
9160	நடைபெறும் பணிகள்				
9180	குத்தகை சொத்துக்கள்				

3.6. கணக்காய்வாளர் அறிக்கை**

** கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட வேண்டிய 2023 டிசம்பர் 31 இற்கான இறுதி கணக்காய்வு அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது (பின்னிணைப்பு 1).

அத்தியாயம் 04

செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1. நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டிகள் (செயற்பாட்டு திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது)

குறிப்பீட்டு சுட்டிகள்	எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளின் சதவீதமாக (%) உன்மையான வெளியீடு		
	100% - 90%	75% - 89%	50% - 74%
நிதி உடன்படிக்கைகள்	96.5		
நிதி பகிர்வுகள்	93.6		
தொழில்நுட்ப பயிற்சி வாய்ப்புகள் (அலுவலர்களின் எண்ணிக்கை)	112.7		

அத்தியாயம் 05

நிலையான அபிவிருத்தி இலக்குகள் செயலாற்றுகை (SDG)

5.1. இனம்காணப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக்காட்டல்

இலக்கு / நோக்கம்	அடைவுகள்	அடைவுச் சுட்டிகள்	உரிய திகதியில் அடைவு முன்னேற்றம்		
			0%-49%	50%-74%	75%-100%
நாடுகளுக்குள்ளும் இடையிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல்	ஐ.அ.டொ 530 மில்.	பெறுநர் மற்றும் நன்கொடையாளர் நாடுகள் மற்றும் வழங்கல் வகை ஆகியவற்றால், வளர்ச்சிக்கான மொத்த வள ஒதுக்கம் (உ+ம் - உத்தியோகபூர்வ உதவி, வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் ஏனைய வழங்கல்) *அடைவு: ஐ.அ.டொ. 454 மில்லியன்.*			86
நெகிழக்கூடிய உட்கட்டமைப்பை உருவாக்குதல், உள்ளடக்கிய நிலையான தொழில் மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளை வளர்த்தல்	ஐ.அ.டொ 470 மில்.	மொத்த உத்தியோகபூர்வ சர்வதேச ஆதரவு (உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி மற்றும் உட்கட்டமைப்புக்கான ஏனைய உத்தியோகபூர்வ ஒதுக்கு) *அடைவு: ஐ.அ.டொ. 385 மில்லியன்.*			82
அனைத்ததையும் உள்ளடக்கிய மற்றும் சமமான தரமான கல்வியை உறுதி செய்தல், முழுவதும் கற்றல் வாய்ப்புக்களை ஊக்குவித்தல்	1200	துறை மற்றும் கற்கை வகை அடிப்படையில் புலமைப்பரிசிலுக்கான உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவிகளின் அளவு. குடைத்த வாய்ப்புகளின் எண்ணிக்கை: *1352*			113

5.2. நிலையான அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள் சுருக்க விபரம்

அபிவிருத்தி பங்காளர்கள் ஆண்டுதோறும் வெளிநாட்டு நிதியைச் வழங்குகிறார்கள், இது மொத்த உறுதிப்பாடுகளாக பதிவு செய்யப்படுகிறது. வுரிசை அமைச்சுக்களின் தொடர்புடைய அபிவிருத்தி திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம், விவசாயம், நீர்ப்பாசனம், திறன் மேம்பாடு, கல்வி, வறுமை ஒழிப்பு, வீதி, நெடுஞ்சாலைகள், நகர்ப்புற மேம்பாடு, சுகாதாரம் போன்ற பல்வேறு துறைகளில் வெவ்வேறு திட்டங்களை செயல்படுத்த இந்த உறுதிப்பாட்டடு நிதி வழங்கப்படுகிறது. இருப்பினும், சுற்றுச்சூழல் அனுமதி, காணி கையகப்படுத்தல், பயன்பாட்டு மாற்றம், இடமாற்றம் மற்றும் மீள்குடியேற்றம், மதிப்பீடு மற்றும் கொள்முதல் போன்ற திட்ட தயார்நிலை தொடர்பான பிரச்சினைகள் காரணமாக, திட்டமிட்டபடி விநியோகத்தை உணர முடியாது.

அத்தியாயம் 06

மனிதவள விபரம்

6.1. பதவியணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்பொழுதுள்ள பதவியணி	வெற்றிடங்கள் ∴(மேலதிக)**
சிரேட்ட	43	37	6
மூன்றாம் நிலை	3	3	0
இரண்டாம் நிலை	66	60	6
